# பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

1. அவன் ரொம்ப புத்திசாலியா இருக்கான்.

   அவன் மிகவும் புத்திசாலியாக இருக்கின்றான்.

2. ஒங் கிட்ட பொம்ம இருக்கா?

   உன்னிடம் பொம்மை இருக்கின்றதா?

3. பூன பால் குடிக்குது.

   பூனை பால் குடிக்கின்றது.

4. விடுபட்டத வரஞ்சி வண்ணம் தீட்டு.

   விடுபட்டதனை வரைந்து வண்ணம் தீட்டு.

5. படத்தப் பாத்து பேர் எழுது.

   படத்தைப் பார்த்து பெயர் எழுது.

6. எனக்குப் பிடிச்ச விளயாட்டச் சொல்லட்டா?

   எனக்குப் பிடித்த விளையாட்டைக் கூறட்டுமா?

7. நா பந்த எட்டி உதச்சேன்.

   நான் பந்தை எட்டி உதைத்தேன்.

8. தெரிஞ்ச எழுத்த வட்டமிடு.

   தெரிந்த எழுத்தை வட்டமிடு.

9. நீ எந்த ஊர்ல இருக்க?

   நீ எந்த ஊரில் இருக்கின்றாய்?

10. சிங்கம் விலங்குகள வேட்டையாடி சாப்டும்.

    சிங்கம் விலங்குகளை வேட்டையாடி உண்ணும்.